## தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகம் - 2013

தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவு மற்றும் 2001 இன் 01 ஆம் இலக்க தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவக (கூட்டிணைத்தல்) அதிகாரச்சட்டத்தின் 22 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள்

**(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 08**

முன்னைய ஆண்டிற்குரிய செலவினங்களின் கூட்டுத்தொகை ரூபா 65,441 தொகை இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இன் பிரகாரம் முன்னோக்கி மீண்டும் வெளிப்படுத்துவதற்காக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக முன்னைய ஆண்டின் சீராக்கமாக மீளாய்வாண்டின் திரண்ட இலாபத்திற்குச் சீராக்கப்பட்டிருந்தது.

**(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16**

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களை மீள்மதிப்பீடு செய்யப்படும் போது சம அணியிலுள்ள அச்சொத்துக்கள் முழுவதும் மீள் மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும், முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டு முடிவடைந்த ஆனாலும் இன்னும் பாவனையிலுள்ள ரூபா 45.19 மில்லியன் கிரயத்திலான ஆதனங்கள பொறிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றில் ரூபா 25.67 மில்லியன் கிரயத்திலான சொத்துக்கள் மாத்திரம் மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தன.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மை

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங் களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவை | |
| (i) V ஆம் அத்தியாயத்தின் 2.1 ஆம் பிரிவு, 2.4 ஆம் பிரிவு மற்றும் 2007 மே 11 ஆம் திகதிய 09/2007 ஆம் இலக்க பொது நிர்வாகச் | மத்திய மாகாண பொறியியல் சேவைகள் அலுவலகத்தில் முழுநேர சேவையில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தர் ஒருவர் நியமன அதிகாரியின் அனுமதியை பெற்றுக் கொள்ளாமல் நிறுவகத்தின் கேட்போர்கூட நிர்மாணத்தின் மதியுரைச் சேவைக்காக நியமிக்கப்பட்டிருந்தார். |

| | | |
|---|---|---|
| | சுற்றறிக்கை | இந்த உத்தியோகத்தர் ஓய்வுபெற்றதன் பின்னர் அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல் மீண்டும் அரச சேவைக்கு நியமிக்கப்பட்டிருந்தார். |
| (ii) | V ஆம் அத்தியாயத்தின் 2.5.3 ஆம் பிரிவு | அரச கூட்டுத்தானமொன்றில் சேவை புரிவதற்காக தற்காலிகமாக விடுவிக்கப்படுகின்ற அரச உத்தியோகத்தரின் புதிய திரட்டிய சம்பளத்தில் 25 சதவீதம் ஓய்வூதிய பங்களிப்பு தொகைக்கு அனுப்பப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை

| | | |
|---|---|---|
| (i) | நிதிப் பிரமாணம் 71 | திறைசேரி பிரதிச் செயலாளரின் முன் அங்கீகாரமொன்று இல்லாமல் முகாமைத்துவ சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் மாத்திரம் மதியுரையாளரொருவர் நியமிக்கப்பட்டு, மதியுரைக் கொடுப்பனவாக மாதமொன்றிற்கு ரூபா 40,000 வீதம், 2010 யூலை 31 முதல் 2014 யூலை 31 வரை ரூபா 1,240,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (ii) | நிதிப் பிரமாணம் 136 | செயற்திட்ட பணிப்பாளர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவரின் பரிந்துரையொன்று இல்லாமல் பால் கிராம செயற்திட்டத்திற்காக ரூபா 130,300 ஆன செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| (iii) | நிதிப் பிரமாணம் 169 | வருமானங்கள் தீர்வையாகுவதற்கு முன்னர் சேவை வழங்கல் மேற்கொள்ளப்பட கூடாத போதிலும், கட்டணங்களை அறவிடாமல் விரிவுரை மண்டபங்கள், உணவு, தங்குமிட வசதிகள் மற்றும் அச்சீட்டுச் செலவினச் சேவைகள் வழங்கப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டின் நிலுவை வருமானம் ரூபா 1,342,674 ஆக இருந்தது. |
| (iv) | நிதிப் பிரமாணம் 395(ஐ) | சேகரிக்கப்படும் பணத்தை வங்கியில் வைப்புச் செய்தல், காசோலை எழுதுதல் அல்லது காசேட்டை பராமரித்துச் செல்லல் போன்ற செயற்பாடுகளுடன் எவ்வித தொடர்பொன்றும் இல்லாத உத்தியோகத்தர் ஒருவரால் வங்கி இணக்கக்கூற்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக ஒரே உத்தியோகத்தரால் அவ் அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் பட்டிருந்தன. |
| (v) | நிதிப் பிரமாணம் 1646(ஆ) | வாகனங்கள் தொடர்பாகவும் அவற்றின் |

| | | |
|---|---|---|
| | | உபகரணங்கள் தொடர்பாக வருடாந்தம் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (v) | நிதிப் பிரமாணம் 1647(உ) | வாகனங்கள் தொடர்பாக விரிவான தகவல்கள் உள்ளடக்கப்பட்ட பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

(இ) பொது நிர்வாகச் சுற்றறிக்கை

| | | |
|---|---|---|
| (i) | 1999 பெப்ரவரி 26 ஆம் திகதிய 02/99 ஆம் இலக்க சுற்றறிக்கை | செல்லிடத் தொலைபேசி வழங்கல் அமைச்சரவை அமைச்சு செயலாளருக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்த போதிலும், அதற்கு முரணாக மீளாய்வாண்டின் போது நிறுவகத்தின் தலைவருக்கும் பணிப்பாளர் நாயகத்திற்கும் ரூபா 42,990 செலவு செய்து 02 செல்லிடத் தொலைபேசி வழங்கப்பட்டிருந்தன. |
| (ii) | 2007 செப்தம்பர் 11 ஆம் திகதிய 21/2007 ஆம் இலக்க சுற்றறிக்கை | நிறுவகத்தின் இரண்டு உத்தியோகத்தர்கள் வெளிநாடு செல்லும் போது பிரதமரிடமிருந்து விடுமுறை அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஈ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.2.3 ஆம் பந்தி | நிலையான வைப்புக்களில் பணத்தை முதலீடு செய்வதற்காக நிதி அமைச்சரின் முன்அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு பெற்றுக் கொள்ளாது ரூபா 4.9 மில்லியன் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. |
| (உ) | 2003 ஆகஸ்ட் 25 ஆம் திகதிய எம்எவ்/6/1/2/03 ஆம் இலக்க நிதி அமைச்சின் சுற்றறிக்கை மற்றும் 2003 ஒக்தோபர் 28 ஆம் திகதிய பீஈடீ/17 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | உள்நாட்டு நிதியத்தைப் பயன்படுத்தி உத்தியோகத்தர்களை வெளிநாட்டிக்குச் செல்லும் போது பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், மூன்று வெளிநாட்டு பயணங்களுக்காக அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்க வில்லை. |
| (ஊ) | இலங்கை தேசிய கொள்வனவு நிறுவகத்தின் மதியுரைச் சேவைகள் வழிகாட்டிக் கோவை | கேட்போர்கூட மதியுரையாளருக்கு கொடுப்பனவு செய்யும் போது 2007 ஆம் ஆண்டில் விநியோகிக்கப்பட்ட இலங்கை தேசிய கொள்வனவு நிறுவகத்தின் மதியுரைச் சேவைகள் வழிகாட்டிக்கோவைக்கு இணங்கும் வகையில் கொடுப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆம் திகதி முடிவுற்ற ஆண்டிற்காக நிறுவகத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் விளைவுகள் ரூபா 706,722 தொகை பற்றாக்குறையாக இருந்தது. அதற்கு ஒப்பாக முன்னைய ஆண்டின் செயற்பாட்டு நடவடிக்கைகளில் ரூபா 6,086,352 பற்றாக்குறையாக இருந்தது. முன்னைய ஆண்டிற்கு

ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 5,379,580 ஆன சாதகமான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டதுடன், இவ் அதிகரிப்பு தொடர்பில் அரச மானியங்கள் ரூபா 5,703,066 ஆலும் நிறுவகம் உழைத்த வருமானம் ரூபா 5,079,920 ஆலும் அதிகரித்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2001 இன் 1 ஆம் இலக்க தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவன (நிறுவுதல்) அதிகாரச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தை நிறுவுவதன் மூலம் அடைந்துகொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட கூட்டுறவு அபிவிருத்தி தொடர்பான ஆராய்ச்சிகளை மேம்படுத்துதல், முகாமைத்துவ நிபுணத்துவம் தேவைப்படும் கூட்டுறவு முயற்சிகளை பொறுப்பேற்று முகாமை செய்தல் அவற்றிற்கு தொழில்சார் அறிவுரைகள் வழங்குதல் போன்ற பிரதான பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) நிறுவகத்தால் நடாத்தப்பட்ட பாடநெறிகளின் செயன்முன்னேற்றம்**

(i) மீளாய்வாண்டின் போது 14 தொழில்சார் டிப்ளோமா பாடநெறிகள் நடாத்துவதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் அதில் 08 பாடநெறிகள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன. அதற்காக எதிர்பார்க்கப்பட்ட 243 விண்ணப்பதாரிகளில் 162 விண்ணப்பதாரிகள் மாத்திரம் பாடநெறிகளைப் பின்பற்றியிருந்ததுடன், செயன்முன்னேற்றம் 67 சதவீதமாக இருந்தது.

(ii) இலக்கிடப்பட்டிருந்த 11 சான்றிதழ் பாடநெறிகளில் 08 மாத்திரம் நடாத்தப்பட்டிருந்ததுடன், எதிர்பார்க்கப்பட்ட 290 விண்ணப்பதாரிகளில் 241 விண்ணப்பதாரிகள் சமூகமளித்திருந்தமையால் செயன் முன்னேற்றம் 83 சதவீதமாக இருந்தது.

(iii) மீளாய்வாண்டில் இலக்கிடப்பட்ட 26 குறுங்கால முகாமைத்துவ அபிவிருத்தி பாடநெறிகளில் 22 பாடநெறிகள் நடாத்தப்பட்டிருந்தமையால் செயன்முன்னேற்றம் 85 சதவீதமாக இருந்தது.

(iv) கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் வேறு கூட்டுறவு நிறுவனங்களின் வேண்டுகோளின் அடிப்படையில் நடாத்தப்பட்ட 17 பாடநெறிகள் மற்றும் கூட்டுறவுத்துறையின் மேம்பாட்டிற்காக கூட்டுறவு அபிவிருத்தி நிதியத்திலிருந்தும் மக்கள் வங்கியிலிருந்தும் வழங்கப்பட்ட உதவிகளின் கீழ் இலவசமாகவும் சலுகை அடிப்படையிலும் 04 பாடநெறிகள் நடாத்தப்பட்டிருந்ததுடன், அப்பாடநெறிகளை நடாத்தியமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 50 சதவீத குறைவொன்று அவதானிக்கப்பட்டது.

(v) 2011 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட வெளிவாரி பட்டப்படிப்பு, பட்டயக் கணக்கியல். கணக்கியல் தொழில்நுட்பம் மற்றும் சான்றுறுதிப்படுத்தப்பட்ட முகாமைத்துவ கணக்காளர் போன்ற துறைசார் பரீட்சைகளுக்காக 11 உதவி நிகழ்ச்சித்திட்டங்கள் 2013 ஆம் ஆண்டின் போது நடாத்தப்பட்டிருந்ததுடன், அதற்காக 188 பயிலுனர்களே பங்குபற்றியிருந்தனர். 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 12 சதவீதம் குறைவாக இருந்தது.

**(இ) நிறுவகத்தால் நடாத்தப்பட்ட பாடநெறிகளும் வருமான செயன்முன்னேற்றமும்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டில் இலக்கிடப்பட்ட குறுங்கால முகாமைத்துவ பாடநெறி வருமானத்தை மிகைத்து வருமானம் உழைக்கப்பட்டிருந்த போதிலும், முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது ரூபா 2,177,746 ஆல் அல்லது 31 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது.

(ii) மீளாய்வாண்டில் நிரந்தர பயிற்சி, தொழில்சார் சான்றிதழ் பத்திர பாடநெறிகள் மற்றும் தொழில்சார் டிப்ளோமா பாடநெறிகளுக்காக இலக்கிடப்பட்ட வருமானத்திற்கு ஒப்பாக உள்ளவாறான வருமானம் ரூபா 5,383,116 ஆன குறைவொன்றாக இருந்ததுடன், அது இலக்கிடப்பட்ட வருமானத்தில் 42 சதவீதக் குறைவாகும்.

**(ஈ) கூட்டுறவு பால் கிராம செயற்திட்டம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2013 ஒக்தோபர் 06 ஆம் திகதிய என்பீ/3 ஆம் இலக்க தேசிய கொள்வனவுத் திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த கூட்டுறவு பால் கிராம செயற்திட்டத்திற்குரிய செயற்திட்ட முன்மொழிவு தேசிய கொள்வனவுத் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்படாமல் இருந்ததுடன், அதற்கான ஏற்பாடு 2013 இன் வருடாந்த பாதீட்டில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) ரூபா 20,000,000 ஆன மதிப்பிடப்பட்ட தொகையில் மக்கள் வங்கி, கூட்டுறவு நிதியம் மற்றும் தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனங்களின் இணக்கப்பாடொன்று இல்லாமல் ரூபா 11,600,000 தொகை பங்களிப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது.

(iii) மீளாய்வாண்டிற்காக ரூபா 3,600,000 தொகையான மதிப்பீட்டில் ரூபா 519,712 தொகை அதாவது 14.43 சதவீதம் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தமையால் இவ்வாண்டிற்காக மிகை மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(iv) செயற்திட்டத்தின் முதலாம் கட்டத்தின் போது வடமேல் மாகாணத்தின் குருணாகலை, புத்தளம் மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்களில் பால் கிராமங்களை உருவாக்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் புத்தளம் மாவட்டத்தில் அச்செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டிருக்கவில்லை.

(v) செயற்திட்ட திட்டத்தின் பிரகாரம் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு ஓராண்டு கழிந்திருந்த போதும் திட்டத்தின் இலக்குகள் நிறைவேற்றப்பட்ட முறை தொடர்பான செயலாற்றல் அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்படாமல் இருந்ததுடன், செலவிடப்பட்ட செலவினங்களைப் பரீட்சிக்கும் போது மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரை செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நிறைவேற்றுவதற்கு இலக்கிடப்பட்டிருந்த செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**4.2 முகாமைத்துவ செயற்திறனின்மை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த நிறுவகத்திற்குச் சொந்தமான 26 ஏக்கர் அளவிலான காணிக்கு நிறுவகத்தின் பெயரில் பெற்றுக்கொள்ள வேண்டிய காணியின் உரித்தை உறுதிப்படுத்துவதற்கான உறுதியைப் பெற்றுக்கொள்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் நிலுவையாக இருந்த ரூபா 752,150 தொகையான விரிவுரை மண்டபம், உணவு, தங்குமிடக் கட்டணங்கள் மற்றும் ரூபா 41,122 தொகையான அச்சீட்டுக் கட்டணங்கள் என ரூபா 739,272 கூட்டுத்தொகையான வருமானத்தை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. போதியளவு உள்ளகக் கட்டுப்பாட்டு வழிமுறைகளை முறையாக நடைமுறைப்படுத்தாமை மற்றும் பல வருடங்களாக கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக் காட்டப்பட்டிருந்த விடயங்கள் தொடர்பாக உரிய கவனம் செலுத்தாதிருந்தமையால் மேலும் அறவிடப்பட வேண்டிய வருமான மீதி வருடாந்தம் அதிகரித்திருந்தது.

(இ) 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் முறையான உடன்படிக்கையொன்று இல்லாமல் நிறுவகத்தின் தொழிலாளர் விடுதியொன்று 11 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக வ/ப மஹாவலி கூட்டுறவு சங்கத்திற்கு வாடகை அறவிடாமல் பயன்பாட்டிற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. 2007 ஆகஸ்ட் 08 ஆம் திகதிய பாத்ததும்பர பிரதேச செயலாளரின் கடிதத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சிக்கன வாடகை மதிப்பீட்டின் பிரகாரம் 06 ஆண்டுகளுக்கும் 05 மாதங்களுக்குமாக ரூபா 57,750 தொகையான வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பாடநெறிக் கட்டணங்கள் அறவிடுவதற்காக முறையான மற்றும் போதியளவு கட்டுப்பாட்டு முறைகள் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தப்படாமை, பாடநெறிகளுக்கு ஆட்சேர்க்கும் போது கட்டணங்கள் அறவிடுவதில் கொள்கை ரீதியான முறையொன்று நிறுவகத்தில் காணப்படாமை மற்றும் அவ்வாறான முறைமையொன்று பாடநெறி வழிகாட்டியில் உள்ளடக்கப்படாமை மூலம் விண்ணப்பதாரிகள் அறிவுறுத்தப்படாமையால் 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் பாடநெறி வருமானம் ரூபா 911,320 தொகை நிலுவையாக இருந்தது.

(உ) நிலத்திற்கான குத்தகை உடன்படிக்கையின் நிபந்தனை இலக்கம் 16 இன் பிரகாரம், நிலத்தின் விளைச்சலில் அல்லது உழைக்கும் தொகையில் முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தின் கீழ் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படுகின்ற சதவீதமொன்று நிறுவகத்தினால் பெயரிடப்படுகின்ற கணக்கிற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும், 2010 ஆம் ஆண்டிலிருந்து 2014 யூலை 25 வரை அதன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு முகாமைத்துவம் தவறியிருந்தது.

(ஊ) வ/ப நுவரெலியா விவசாய கூட்டுறவு சங்கத்தின் வேண்டுகோளின் பிரகாரம் நிறுவகத்தின் பிரதான நுழைவாயிலுக்கு அண்மையில் நாற்றுக்கள் வீடொன்றும் விற்பனை நிலையமொன்றும் உடன்படிக்கையொன்று இல்லாமல் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. இந்நிர்மாணத்திற்காக பயன்படுத்தப்பட்ட காணியின் அளவு எவ்வளவு என்பது குறிப்பாக இனங்காணப்படாமல் இருந்ததுடன், முறையான மதிப்பீடொன்று இல்லாமல் 2011 ஏப்ரல் மாதத்திலிருந்து ரூபா 5,000 மாதாந்த வாடகை அறவிடப்பட்டிருந்தது.

(எ) 2012 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கை மூலம் அகற்றப்பட்ட வேண்டுமென இனங்காணப்பட்ட ரூபா 5,027,069 தொகையான நிலையான சொத்துக்கள் தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 செயற்பாட்டு செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) கேட்போர் கூடத்திற்கான மதியுரை சேவை**

(i) மதியுரையாளர் நியமிக்கப்பட்ட தினத்திலிருந்து நிர்மாண நிலையம் தொடர்ச்சியாக மேற்பார்வை செய்யப்பட வேண்டியதுடன், வேலைத்தளத்தில் உள்ள சம்பவப் பதிவேட்டுப் புத்தகத்தில் வருகை பதிவு செய்யப்பட வேண்டும். இவ்வருகைப் பதிவேடு சரியானதென நிறுவகத்தின் எந்தவொரு உத்தியோகத்தரினதும் மேற்பார்வைக்கு உட்படாமல் இருந்ததுடன், ஒவ்வொரு மாதத்திற்கும் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ii) மதியுரை சேவை கடிதத்தின் பிரகாரம் தகைமையுடைய தொழில்நுட்ப உத்தியோகத்தரொருவர் கட்டிடத்தின் வேலை நடவடிக்கைகள் நிறைவு பெறும் வரை தங்கவைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) சேவை வசதிகள் பெறுகைகள்**

(i) பாதுகாப்பு, சுத்திகரிப்பு மற்றும் சிற்றுண்டிச்சாலைகள் போன்ற சேவைகளை வழங்கும் ஒப்பந்தங்களுக்காக வருடாந்தம் கேள்வி கோரப்பட்டு, மதிப்பீடு செய்யப்படாமல், 2011 ஆம் ஆண்டின் போது முறையற்ற விதத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட கேள்வி மனுக்களின் அடிப்படையில் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்த தனியார் கம்பனிக்கே மீளாய்வாண்டிற்கான உடன்படிக்கை காலம் நீடிக்கப்பட்டு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது.

(ii) ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் சுத்திகரிப்பு சேவையை வழங்குவதற்கான ரூபா 224,930 தொகையான மாதாந்தக் கட்டணம் 2013 சனவரி மாதத்திலிருந்து ரூபா 44,620 ஆல் முறையற்ற விதத்தில் அதிகரித்ததன் காரணமாக மீளாய்வாண்டின் போதும் நிறுவகத்திற்கு ரூபா 535,440 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

(iii) சுத்திகரிப்பு சேவை வழங்கல் உடன்படிக்கையின் நிபந்தனைகளின் பிரகாரம் உப ஒப்பந்தம் வழங்கப்பட முடியாத போதிலும், அதற்கு முரணாக ஒப்பந்தத்தை பெற்றுக்கொண்ட தனியார் கம்பனியால் வேறொரு தனியார் நிறுவனமொன்றிற்கு உப ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்ததுடன், இது தொடர்பாக நிறுவனம் எந்தவொரு நவடிக்கையையும் எடுத்திருக்கவில்லை.

(iv) பாதுகாப்பு சேவை வழங்கல் ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் ரூபா 213,000 மாதாந்த கட்டணம் 2013 சனவரி மாதத்திலிருந்து ரூபா 42,000 ஆல் முறையற்ற விதத்தில் அதிகரித்ததன் காரணமாக மீளாய்வாண்டின் போது நிறுவகத்திற்கு ரூபா 504,000 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

(v) பாதுகாப்பு சேவை வழங்கல் ஒப்பந்த உடன்படிக்கையின் 2 ஆம் பிரிவின் பிரகாரம் குறித்த கம்பனியால் ரூபா 50,000 தொகையான பிணைப்பொறுப்பொன்றை சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்காக 2014 யூலை 31 ஆம் திகதி வரையிலும் அப்பிணைப்பொறுப்பிணை பெற்றுக்கொள்வதற்கு நிறுவகம் எவ்வித நடவடிக்கையையும் எடுத்திருக்கவில்லை.

## 4.4 சர்ச்சைக்குரிய கொடுக்கல்வாங்கல்கள்

2013 யூன் 25 – 26 வரையான காலப்பகுதியில் இந்தியாவின் புதுடில்லி நகரில் நடாத்தப்பட்ட 16 ஆவது இந்திய கூட்டுறவு மாநாட்டிற்கு தேசிய கூட்டுறவு நிறுவகத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினரொருவரை பங்குபெறச் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், 2013 யூன் 12 ஆம் திகதிய எம்எப்2/57/என்ஜசீடி ஆம் இலக்க திறைசேரி செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் பணிப்பாளர் சபை அங்கத்துவத்திலிருந்து நீக்கப்பட்டிருந்த உத்தியோகத்தரொருவர் இம்மாநாட்டிற்கு சமூகமளித்திருந்தார். சுங்கத் திணைக்களத்தின் கணக்காளரான இந்த உத்தியோகத்தர் நிறுவகத்தின் பதவியணிக்கு புறம்பான உத்தியோகத்தராக மேற்படி சுற்றுலாவில் பங்குபெறச்செய்து அச்சுற்றுலாவிற்கான அனுபவம் மற்றும் அறிவினை நிறுவகத்திற்கு பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்ததுடன், அதற்காக செலவிடப்பட்ட ரூபா 268,638 தொகை பயனற்ற செலவினமொன்றாக இருந்தது.

## 4.5 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

(அ) பெறுமதி பதிவேடுகளுக்கு உட்படுத்தப்படாத 30 இற்கும் 520 இற்கும் இடைப்பட்ட 07 பொருள் உருப்படி வகைகள் களஞ்சியத்திலும் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத அலுவலக உபகரணங்கள், கணனிகள் மற்றும் உள்ளக தொலைபேசி முறைமைக்குரிய பகுதிகள் பிரதான மண்டபத்தின் பின்பகுதியிலும், பழைய அலுவலக கட்டிடத்தின் விராந்தையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத விரிவுரையாளர்களின் அறைகளிலும் விளைவற்றுக் காணப்பட்டன.

(ஆ) கற்புல செவிப்புல பிரிவில் 2012 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பொருள் மெய்மையாய்வின் போது பயன்பாட்டிற்கு எடுக்க முடியாததாக இனங்காணப்பட்ட பொருட்கள் இருப்பு தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.6 பதவியணியினர் நிர்வாகம்

நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி எண்ணிக்கை 71 ஆக இருந்ததுடன், உள்ளபடியான பதவியணி எண்ணிக்கை 30 ஆக இருந்தமையால் வெற்றிடங்களின் எண்ணிக்கை 41 ஆக இருந்தது. இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்காக நிதிப்பிரமாணம் 71 இன் பிரகாரம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2002 மே 24 ஆந் திகதிய பீஈ/பீஎவ் 21 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கையின் 2 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2013 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 யூன் 22 ஆந் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 5.2 உள்ளகக் கணக்காய்வு

2009 யூன் 09 ஆம் திகதிய டீஎம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று தாபிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்படாதிருந்தமையால் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும்

உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளை அமைச்சின் உள்ளக கணக்காய்வு பிரிவினூடாக மேற்கொள்வது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்ட செலவினங்களுக்கும் உள்ளபடியான செலவினங்களுக்கிடையே குறிப்பிடத்தக்க விலகல்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

## 5.4 தீர்வு காணப்படாதுள்ள கணக்காய்வுப் பந்திகள்

முன்னைய கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும், போதியளவு கவனம் செலுத்தப்படாதிருந்த கணக்காய்வுப் பந்திகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| 2012 ஆம் ஆண்டின் கணக்காய்வுப் பந்தியுடனான தொடர்பு | கணக்காய்வுப் பந்தியின் சுருக்கம் |
|---|---|
| (அ) 4.1 (அ) | 2001 இன் 1 ஆம் இலக்க தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவக (கூட்டிணைத்தல்) அதிகாரச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தினை ஆரம்பித்த நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு எதிர்பார்த்த பிரதான செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 4.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள் | தகவல் தொழில்நுட்ப விடயத்திற்குரிய பாடநெறிகளை மேம்படுத்துவதற்காக நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியிலிருந்து விலகி ஒப்பந்த அடிப்படையில் மதியுரையாளரொருவர் சேர்க்கப்பட்டு 2012 ஆம் ஆண்டின் போது மதியுரைப் படிகளாக ரூபா 360,000 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் குறித்த நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 4.6 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள் | |
| (அ) கேட்போர்கூட நிர்மாணம் | மதியுரை சேவையை வழங்கிய மதியுரையாளர் அரச சேவையில் ஈடுபட்டிருக்கும் போது அனுமதியின்றி தனிப்பட்ட ரீதியில் மதியுரை சேவைகளை வழங்கி ரூபா 2.15 மில்லியன் தொகையான கட்டணங்களைப் பெற்றுக்கொண்டமை தொடர்பாக அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 5.2 உள்ளகக் கணக்காய்வு | நிதிப் பிரமாணம் 133 இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று உருவாக்கப்பட்டிருக்கவில்லை. |

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது நிறுவகத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான முகாமைத்துவம்
(இ) சொத்து முகாமைத்துவம்
(ஈ) நிர்மாணிப்புக்கள் மற்றும் சேவை வழங்கல், ஒப்பந்த நிர்வாகம்
(உ) மனிதவள முகாமைத்துவம்